செ.வெ.எண்: 352 நாள்: 01.06.2018

# திருநெல்வேலி மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஷில்பா பிரபாகர் சதீஷ்,இ.ஆ.ப., அவர்கள் அறிவிப்பு.

திருநெல்வேலி மாவட்ட அரசு இசைப்பள்ளி 1997 ஆம் ஆண்டு தமிழக அரசு கலை பண்பாட்டுத்துறை வாயிலாக தொடங்கப்பட்டு 870/21 அரசு அலுவலர் 'ஆ'குடியிருப்பு, கலை பண்பாட்டு வளாகம், திருநெல்வேலி –7 என்ற( தொலை பேசி எண். 0462 2551400 ) முகவரியில் கடந்த 21 ஆண்டுகளாக மிக சிறப்பாக இயங்கி வருகிறது. திருநெல்வேலி மாவட்ட அரசு இசைப்பள்ளியில் பயிற்றுவிக்கும் கலைகள் குரலிசை, நாதசுரம், தவில், தேவாரம், பரதநாட்டியம், வயலின் மற்றும் மிருதங்கம் ஆகிய கலைகள் பயிற்றுவிக்கப்பட்டு வருகிறது. இசைப்பள்ளியில் பயில்வதற்கு மாணவ – மாணவியர்களுக்கு வயது வரம்பு – 12 வயது முதல் 25 வயதுக்குள் இருக்க வேண்டும் . மூன்றாண்டுகள் பயில வேண்டும். முதல் ஆண்டுக்கு ரூ 152/–ம் இரண்டாம் ஆண்டு , மூன்றாம் ஆண்டு மாணவர்களுக்கு ரூ.120/–மட்டும் கல்வி கட்டணமாக வசூலிக்கப்படுகிறது.

2018 – 2019 ஆம் ஆண்டிற்கான மாணவர்கள் சேர்க்கை மே '2018 மாதம் முதல் நடைபெற்று வருகிறது . திருநெல்வேலி மாவட்ட அரசு இசைப்பள்ளியில் படிக்கும் மாணவ – மாணவியர்களுக்கு தமிழக அரசு அறிவித்துள்ள இலவச பேருந்து வசதி, இரயில் கட்டண சலுகை வசதி ,தங்கும் விடுதி வசதி , மாதம் தோறும் மாணவர்களுக்கு கல்வி ஊக்கத்தொகை ரூ.400/–, மற்றும் இலவச சீருடை, இலவச மிதி வண்டி மற்றும் இலவச காலணி ஆகியன அரசு விதிமுறைகளுக்குட்பட்டு மாணவர்களுக்கு வழங்கப்பட்டு வருகிறது.

திருநெல்வேலி மாவட்ட அரசு இசைப்பள்ளியில் மூன்றாண்டு பயிற்சி முடிக்கும் மாணவ – மாணவியர்களுக்கு தமிழக அரசு தேர்வு இயக்ககத்தால் தேர்வு நடத்தப்பட்டு தேர்ச்சி பெற்ற மாணவர்களுக்கு சான்றிதழ் வழங்கப்பட்டு வருகிறது. சான்றிதழ்களை மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் பதிவு செய்து பணிமூப்பு அடிப்படையில் இசைப்பள்ளிகளில் மற்றும் இந்து அறநிலையத்துறைக்கு உட்பட்ட கோயில்களில் வேலைவாய்ப்பு அளிக்கப்படுகிறது. அனைத்து மாணவ – மாணவியர்களும் திருநெல்வேலி மாவட்ட அரசு இசைப்பள்ளியில் சேர்ந்து இசையினைக் கற்று இசை ஆசிரியர்களாகவும் கலை வல்லுநர்களாகவும் உருவாகுவதற்கு வாய்ப்புகள் உள்ளது. இத்செய்தியினை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,திருநெல்வெலி